**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 43/2023 |
| Name | : Sekar |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.11.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் செங்கழனிபுதூரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும் பின்னால் அவர் பெயர் விஷ்ணு என்று தெரிந்து கொண்டேன். 19.02.2023 ம் தேதி நானும், எனது மனைவி செல்வியும் காலை 06.00 மணிக்கு தோட்டத்திற்கு சென்றுவிட்டு எனது மாமனார் கோவிலுக்கு செல்வதற்கு அழைத்ததால் மதியம் 02.00 மணிக்கு வீட்டிற்கு வந்த போது ஆஜர் எதிரி கடப்பாறையால் எங்கள் வீட்டின் கதவை குத்திக்கொண்டிருந்தார் எங்களை பார்த்த உடன் கடப்பாறையை போட்டுவிட்டு மதில் சுவரை தாண்டி குதித்து கரும்பு காட்டிற்குள் ஓடினார். அவரது கறுப்பு சிவப்பு நிற பல்சர் இருசக்கர வாகனம் எனது வீட்டின் முன்பு இருந்த ரோட்டில் நின்றிருந்தது சிறிது நேரம் கழித்து விஷ்ணு அங்கு வந்தார். ஆட்கள் சேர்ந்து அவரை பிடித்துக்கொண்டோம். மதியம் காவல் நிலையத்தில் அவரை இருசக்கர வாகனத்துடன் ஒப்படைத்தோம். எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கடப்பாறையால் தான் அன்று எதிரி எனது

வீட்டின் கதவை குத்திக்கொண்டிருந்தார். **கடப்பாறை அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் தான் அன்று ஆஜர் எதிரி கொண்டு வந்த இருசக்கர வாகனம் ஆகும். **அது அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் தோட்டத்து வேலை முடிந்து வீட்டிற்கு சென்றதாக சொன்ன சமயத்தில் வீட்டின் அருகில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் வீட்டின் அருகில் கடைகளில் 5–6 பேர் இருந்தார்கள். எங்கள் வீட்டின் தென்புறம் சற்று தள்ளி ஒரு சிறிய பெட்டிக் கடை உள்ளது. எனது வீட்டிற்கு எத்தனை கதவுகள் உள்ளது என்றால் ஒரு கதவு மற்றும் முன்னால் ஒரு கேட் உள்ளது. எங்கள் வீட்டிற்குள் செல்ல வேண்டும் என்றால் காம்பவுண்ட் சுவருக்குள் செல்ல வேண்டும் என்றால் சரிதான். எனது வீட்டின் கதவில் உள்ள பூட்டு தொங்கும் வகையிலான பூட்டா அல்லது கதவுடன் சேர்ந்த பூட்டா என்றால் தொங்கும் வகையிலான் பூட்டு. உடைந்த பூட்டை போலீசார் வந்து பார்வையிட்டார்களா என்றால் அதை உடைத்து திறப்பதற்குள் நாங்கள் வந்துவிட்டோம்.

(2) எனது வீடு மடத்துக்குளம் – கொமரலிங்கம் சாலையில் இருந்து 50 அடி தள்ளி உள்ளது. எங்கள் வீட்டிற்கு அருகில் குடியிருப்புகள் அதிகம் உள்ளது என்றால் சரியல்ல வீட்டின் எதிரில் மற்றும் மேபுறம் இல்லை சற்று தள்ளி உள்ளது. அ.சா.பொ.1 கடப்பாறை கம்பி என்னுடையதா என்றால் இல்லை. ராஜசேகர் மற்றும் ராஜசேகரன் பக்கத்து வீட்டுக்காரர்களா என்றால் இல்லை அருகில் உள்ள கடைக்கு வந்தவர்கள் எனது உறவினர்கள். எதிரி நாங்கள் பார்த்த உடன் மதில் சுவரை தாண்டி கரும்பு காட்டிற்குள் ஓடிவிட்டார். ஓடும் போது யாரும் அவரை பிடிக்கவில்லை என்றால் அவர் வண்டி எடுப்பதற்காக திரும்பி வந்த போது நாங்கள் அவரை பிடித்துவிட்டோம். காவல் நிலையத்திற்கு வந்து தகவல் கொடுத்துவிட்டு திரும்ப செல்லும் போது அவர் அங்கு வந்தார் அவரை பிடித்துவிட்டோம். புகார் கொடுத்துவிட்டு வீட்டிற்கு திரும்ப செல்லும் போது போலீசார் உடன் வந்தார்களா என்றால் இல்லை.

(3) ராஜசேகர் மற்றும் ராஜசேகரன் இருவரும் நான் திரும்ப செல்லும் வரை அங்கு இருந்தார்களா என்றால் அவர்கள் முதலில் எதிரி ஓடும் போது அங்கு இல்லை நான்

திரும்ப செல்லும் போது வந்தார்கள். போலீசார் என் வீட்டிற்கு மதியம் 03.00 மணிக்கு வந்தார்கள். சுமார் 02.30 மணிக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வந்தேன். நானும், எனது மனைவியும் புகார் கொடுக்க வந்தோம். புகாரை முதலில் வாய் மொழியாக சொல்லி பின்பு எழுதிக் கொடுத்தோம். போலீசார் அங்கு வந்து என்ன செய்தார்கள் என்றால் நாங்கள் பிடித்து வைத்திருந்த விஷ்ணுவையும், பைக்கையும் எடுத்து வந்துவிட்டார்கள். எதிரி அந்த சமயத்தில் மது அருந்தியிருந்தாரா என்றால் தெரியாது.

(4) எங்கள் வீட்டின் அருகில் டாஸ்மாக் கடை உள்ளது என்றால் சற்று துாரம் தள்ளி உள்ளது. நான் சொன்னது போல் எங்கள் வீட்டின் கதவை எதிரி உடைக்கவில்லை என்றும், எதிரி மது அருந்திக்கொண்டு அங்கு நின்றிருந்தார் என்றும், நாங்கள் போலீஸ்க்கு போன் மூலம் தகவல் சொல்லி அவர்கள் வந்து அழைத்துச் சென்று ஏற்கனவே எதிரி மேல் வழக்குகள் உள்ளதால் பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் போலீசாரிடம் எதிரி மது போதையில் தகராறு செய்து கொண்டிருக்கிறார் என்று தான் தகவல் கொடுத்தேன் என்றும், பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.11.07 19:05:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 43/2023 |
| Name | : | Selvi |
| P.W. | : | 2 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.11.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் செங்கழனிபுதூரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரியை தெரியும் எனது வீட்டில் திருட வந்தார். 19.02.2023ம் தேதி மதியம் 01.15 மணிக்கு எனது அப்பா கோவிலுக்கு செல்வதற்காக அழைத்ததால் நானும், எனது கணவரும் வீட்டிற்கு வந்தோம். அப்போது ஆஜர் எதிரி விஷ்ணு கடப்பாறையால் எங்கள் வீட்டு கதவை உடைத்துக்கொண்டிருந்தார். எங்களை பார்த்த உடன் மதில் சுவர் தாண்டி குதித்து ஓடிவிட்டார். நானும், எனது கணவரும் காவல் நிலையத்தில் வந்து புகார் கொடுத்துவிட்டு மீண்டும் சென்ற போது எதிரி மீண்டும் கடப்பாறையால் கதவை உடைத்துவிட்டார். சத்தம் போட்ட உடன் அருகில் இருந்தவர்கள் துரத்தி அவரை பிடித்தார்கள். போலீசாருக்கு தகவல் சொல்லி அவர்கள் அங்கு வந்து எதிரி மற்றும் அங்கிருந்து எதிரியின் பல்சர் பைக்கை எடுத்து வந்தார்கள். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 கடப்பாறையால் தான் எதிரி எனது வீட்டின் கதவை உடைத்தார். எதிரியிடம் கேட்ட போது கொமரலிங்கம் காவல் நிலையத்தில் கையெழுத்து போடச் சென்ற போது வீட்டை பார்த்து பெரிதாக இருப்பதால் உடைத்ததாக சொன்னார். ரூ.1 லட்சம் மதிப்புள்ள

கதவை உடைத்துவிட்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) எங்கள் வீட்டிற்கு தோட்டத்தில் இருந்து செல்லும் போது 01.15 மணி இருக்கும். நாங்கள் வீட்டிற்கு சென்ற போது அங்கு யாரும் இல்லை. எங்கள் வீட்டிற்கு கதவிற்கு செல்வதற்கு காம்பவுண்ட் சுவரை தாண்டி தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். எங்கள் கதவின் பூட்டு தொங்கும் வகையிலான அல்லது கதவுடன் சேர்ந்த பூட்டா என்றால் கதவுடன் சேர்ந்த பூட்டு. நான் பார்க்கும் போதே அவர் கதவை உடைத்துக்கொண்டிருந்தார். கதவு சேதாரம் ஆகியிருந்தது. உடைந்த கதவை புகைப்படம் எடுக்கவில்லை. எங்கள் வீடு மடத்துக்குளம் – கொமரலிங்கம் ரோட்டில் இருந்து சுமார் 50 அடி தள்ளி உள்ளது. ரோட்டில் இருந்து பார்த்தால் எங்கள் வீட்டின் முன் புறம் தெரியும். எங்கள் வீட்டைச் சுற்றி பொதுவாக ஆள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான்.

(2) நாங்கள் சத்தம் போட்ட உடன் அங்கு யார் வந்தார்கள் என்றால் ரோட்டில் சென்றவர்கள் வந்தார்கள். அவர்களை அதற்கு முன்னரே தெரியுமா என்றால் தெரியும் எனது உறவினர்கள். சம்பவம் பற்றி போலீசாருக்கு போன் மூலம் தகவல் சொன்னோமா என்றால் இல்லை நேரில் வந்தோம். நாங்கள் காவல் நிலையத்திற்கு மதியம் 01.30 மணிக்கு மேல் வந்தோம். புகார் கொடுக்க வந்த சமயத்தில் எதிரியின் பெயர் தெரியாது. காவல் நிலையத்தில் புகார் சொல்லிவிட்டு சுமார் ½ மணி நேரத்தில் வீட்டிற்கு சென்றோம். போலீசார் மதியம் 3 மணிக்கு எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். இரண்டாவது முறையாக புகார் கொடுத்த போது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். எதிரி ஓடியதாக சொன்ன போது அவர் பயன்படுத்தியதாக சொல்லும் கடப்பாறை கம்பியை எடுத்துக்கொண்டு ஓடினாரா அல்லது போட்டுவிட்டு ஓடினாரா என்றால் எடுத்துக்கொண்டு ஓடினார். நான் சொன்னது போல் எங்கள் வீட்டின் கதவை எதிரி உடைக்கவில்லை என்றும், எதிரி மது அருந்திக்கொண்டு அங்கு நின்றிருந்தார் என்றும், நாங்கள் போலீஸ்க்கு போன் மூலம் தகவல் சொல்லி அவர்கள் வந்து அழைத்துச் சென்று ஏற்கனவே எதிரி மேல் வழக்குகள் உள்ளதால் பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. போலீசாரிடம் எதிரி மது போதையில் தகராறு செய்து கொண்டிருக்கிறார் என்று தான் தகவல் கொடுத்தோம் என்றும், பொய்யாக இந்த வழக்கு

பதிவு செய்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதன் பின்பு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. முதல் முறையாக பூட்டை உடைக்க முயற்சி செய்ததாக சொன்ன சமயத்தில் எதிரியை பிடிக்க முடியவில்லை ஓடிவிட்டார். இரண்டாவது முறையாக எப்படி பிடித்தோம் என்றால் ராஜசேகர் மற்றும் அருகில் உள்ளவர்கள் ஓடிச் சென்று பிடித்தார்கள். நான் சென்று பிடிக்கவில்லை.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.11.07 19:05:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

CC No. : 43/2023

Name : Rajasekar

P.W. : 3

Father Name :

Village :

Taluk : Madathukulam

Occupation :

Age : /2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.11.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் நரசிங்காபுரத்தில் வசிக்கிறேன். விவசாயம் செய்கிறேன். **19.02.2023** ம் தேதி மதியம் **01.00** மணி அளவில் நானும், எனது நண்பர் ராஜசேகரன் இருவரும் மடத்துக்குளம் – கொமரலிங்கம் சாலையில் இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். அ.சா.1 சேகர் மற்றும் அ.சா.2 செல்வி எனது உறவினர்கள் அவர்கள் வீட்டின் அருகே சத்தம் கேட்டது. அப்போது அவர்கள் வீட்டின் அருகே இருந்த பெட்டிக் கடையில் தான் நாங்கள் நின்றிருந்தோம். சத்தம் கேட்டு பார்த்த போது அங்கிருந்த ஆள் போய்விட்டார். அதன் பின்பு சேகர் மற்றும் செல்வி கோவிலுக்கு செல்வதற்காக அங்கு வந்தார்கள் அவர்களிடம் சத்தம் கேட்பதாக சொல்லி நாங்கள் அனைவரும் சென்று பார்த்தோம் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது பூட்டை உடைத்த ஆள் அங்கு இல்லை இருவரும் மடத்துக்குளம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள். நாங்கள் சென்று திரும்பி வரும் போது சேகர் போலீசாரை அழைத்து வந்திருந்தார். அந்த சமயத்தில் பின்னார் பெயர் தெரிந்து கொண்ட ஆஜர் எதிரி விஷ்ணு கடப்பாறையை வைத்து கதவை உடைத்துக்கொண்டிருந்தார் சேகர் மற்றும் செல்வி சத்தம் போட்டார்கள் நாங்கள் அங்கு

வந்தோம் பிடிக்க பார்த்த போது மதில் சுவரை தாண்டி பின்னால் இருந்த கரும்பு காட்டிற்குள் ஓடி விட்டார். கொஞ்ச நேரம் கழித்து சேகர் வீட்டின் அருகே இருந்த அவருடைய கறுப்பு நிற பல்சர் பைக்கை எடுப்பதற்காக வந்தார் அப்போது அவர்களை நாங்கள் பிடித்து காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றோம். மதியம் 03.00 மணிக்கு போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்து பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) கடைக்கு அருகில் நின்றிருந்த போது சத்தம் கேட்டதாக சொன்ன போது எத்தனை மணி இருக்கும் என்றால் மதியம் சுமார் 01.00 மணி இருக்கும். சத்தம் கேட்டு உடன் அங்கு சென்று என்ன பார்த்தேன் என்றால் சேகர் மற்றும் செல்வி வந்த உடன் தான் நான் அங்கு சென்று பார்த்தேன். அங்கு வேர் யார் இருந்தார்கள் என்றால் சுமார் 4–5 பேர் இருந்தார்கள் தெரிந்தவர்கள் என்பதால் நான் உடன் சென்று பார்த்தேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 யை அனுப்பி வைத்து விட்டு நான் எங்கு சென்றேன் என்றால் மது கடைக்கு சென்றேன். மது அருந்திவிட்டு தான் திரும்பி வந்தேனா என்றால் இல்லை. நான் எத்தனை மணிக்கு திரும்பி வந்தேன் என்றால் 15 நிமிடத்தில் இருந்து 30 நிமிடத்திற்குள் இருக்கும். நான் வரும் போது யார் இருந்தார்கள் என்றால் நான் வரும் போது சேகர் மற்றும் செல்வி வந்தார்கள். அப்போது எதிரி மீண்டும் கடப்பாறையை வைத்து கதவை உடைத்துக்கொண்டிருந்தார். உடைத்துக்கொண்டிருந்ததை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன் பார்த்து விட்டு நாங்கள் துரத்தினோம். கரும்பு காட்டிற்குள் சென்றுவிட்டார் கொஞ்ச நேரம் வெளியே வரவில்லை திரும்ப வரும் போது பிடித்தோம்.

(2) எதிரியை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தோமா என்றால் எதிரியை பிடித்து வைத்து தகவல் சொன்ன உடன் போலீசார் அங்கு வந்தார்கள். போலீசாருக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் முதலில் அவர்கள் காவல் நிலையம் சென்றுவிட்டு தான் வந்தார்கள் பிடித்து வைத்த பின்பு யார் தகவல் சொன்னார்கள் என்றால் அவர்கள் தான்

போன் மூலம் சொன்னார்கள்.

(3) கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதியிருந்து என்று தெரியும் வீட்டைச் சுற்றி என்ன காலியிடம் உள்ளது என்பதை பற்றி வரைந்தார்கள். நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து காண்பித்தார்கள். எழுதியிருந்த தாளில் கையெழுத்து போட்டேனா அல்லது வரைந்திருந்த தாளில் கையெழுத்து போட்டேனா என்றால் எழுதியிருந்து தாளில் கையெழுத்து போட்டேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் நான் இல்லை என்றும், அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது உறவினர்கள் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.11.07 19:05:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்